மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஆங்காங்கு நாம் பயிற்சி நிலையம் வைத்திருக்கிறோம். உற்பத்தி செய்கின்ற பொருள்களை விற்பனைக்கு வைத்திருக்கிறோம். அதிகமான பொருள்கள் விற்பனையடைந்தால், தொழிலாளிகளுக்கு அதிக ஊதியம் கிடைக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, பனை ஓலையால் செய்யப்படும் பொருட்களை எப்படி எப்படியெல்லாம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று பொதுமக்களுக்குத் தெரியவில்லை. ஆகவே, அதற்கு வேண்டிய அளவு விளம்பரத்தை அரசாங்கம் செய்வதற்கு அந்தந்த மாவட்டங்கள்தோறும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மாவட்டங்களின் தலைநகரங்களில் விற்பனை செய்யும் நிலையம் அமைப்பது என்று முடிவைப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம். ஒரு சில மாவட்டங்களில் விற்பனைக்கூடங்கள் இருக்கின்றன. ஒரு சில இடங்களில் பயிற்சி நிலையங்களை வைத்து அதன்மூலம் பலர் இந்தப் பொருட்களை வாங்குவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

பாய் விற்பனைக்கு வெளிச்சந்தைகள்

* 310 வினா—**திரு. கே. ஏ. வகாப்** : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பத்தமடையில் நெய்யப்படும் பட்டுப்பாய்களுக்கும் வந்தவாசி, வீரநல்லூர், சீர்காழி ஆகிய இடங்களில் நெய்யப்படும் கோரைப்பாய்களுக்கும் போதிய வெளிமார்க்கெட்டுகள் பிடிக்க ஆவன செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இந்த பாய்களை தனியார்கள் வாங்கி வெளிநாடுகளுக்கு அனுப்பி, அதனால் நல்ல லாபம்பெறுகிறார்கள். சென்னையிலும் பம்பாயிலும் உள்ளவர்கள் இந்த பாய்களை வாங்கி வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். பத்தமடை பாய் புகழ்பெற்றது. அமெரிக்க நாட்டில் இந்தப் பாய்களை மிகவும் விரும்பி வாங்குகிறார்கள். ஆகவே, அரசாங்கமே இந்தப் பாய்களை எல்லாம் வாங்கி ஏற்றுமதி செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சார்பில் விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்ட்டியூடும், மத்திய அரசாங்கத்தின் சார்பில் "ஹேண்ட்லூம் அண்டு ஹேண்டிக்ராப்ட்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் கார்ப்பொரேஷனும்" இந்த முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.